இணைப்பு 1

[36 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து அரசுக்கு மனுக்கள் வந்தன. இக்கோரிக்கைகள் குறித்து பட்டதாரி ஆசிரியர் கழகத்தில் பிரதிநிதிகள் நேரிலும் பேசினர். அவர்களது கோரிக்கைகள் மீது கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது :—

(1) அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று, 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணிக்கு வந்த நாளிலிருந்தே வரன்முறைப்படுத்தப்பட்டு ஆண்டு ஊதிய நிலுவைத் தொகையும் வழங்கப்பட வேண்டுமென்பதாகும்.

1—4—1970-க்குப் பின் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில் தமிழ்நாடு பொதுத் தேர்வாணைக் குழுவினால் 1976 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பணியினை அவர்கள் பணியில் தற்காலிகமாகச் சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறை செய்யவேண்டுமென்பதுதான் அவர்களது கோரிக்கை. அக்கோரிக்கையின்படி 1976-ல் தேர்வாணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை அவர்கள் தற்காலிகமாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைபடுத்த 22—12—1980 நாளிட்ட கல்வித்துறை ஆணை எண் 2722-ல் ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் அவர்களில் 1980 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவினால் நடத்தப்பட்ட சிறப்புத் தேர்வில் தேர்ந் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களது பணியினையும் அவர்கள் தற்காலிகமாகச் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைப்படுத்தவும், ஊதிய உயர்வு நிலுவைத் தொகை பெறவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(2) உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்படி இணைப்பாணையை எல்லா மட்டங்களிலும் உடனடியாக அமுல்படுத்த வேண்டும், ஒருங்கிணைந்த பணி மூப்புப் பட்டியலை வெளியிடவேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. அதன்படி ஒருங்கிணைந்த பணிமூப்புப் பட்டியலை அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசால் மேற்கொள்ளப்பட்ட நகரவைப் பள்ளி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து கணக்கில் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(3) மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது உட்படுத்தப்பட்டுள்ள (Inducted) முதுகலைப்பட்டம் பெறாத அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டிற்குள் குறுகிய கால பயிற்சி தொடங்கி, பயிற்சிக்குப்பின் அவர்களை முழுத் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆராய்ந்து இண்டக்டட் ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்று முழுத் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டுமென்ற அடிப்படையில், அறிவியல் மற்றும் கணிதம் எடுத்து பட்டப்படிப்பு பெற்றவர்கள் அதே பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற அவர்களுக்கு கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்கும், மாலை நேர கல்லூரிகளுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்காதவர்கள் படிப்பதற்காக விடுமுறை கால வகுப்புகள் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் முதுகலைப் பட்டம் பெற ஒரு குறிப்பிட்ட அவகாசம் கொடுக்கப்படும். அதுவரை அவர்கள் பதவியிறக்கம் செய்யப்படமாட்டார்கள். அந்த உட்படுத்தப்பட்ட முதுகலைப் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு வழங்கும் சிறப்பு ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(4) மூன்றாம் ஊதியக் குழுவின் குறைபாடுகளைக் களைய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் அறிக்கையை உடனடியாக வெளியிடவேண்டும். மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் அனைத்து அலுவலர்களுக்கும் பொருந்தும் பிரச்னை. ஆகவே அரசு அலுவலர்களைப் பொறுத்தவரை என்ன முடிவு எடுக்கப்படுமோ அது ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

(5) எல்லா தனியார், நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளையும் அரசு மேற்கொள்ளவேண்டும். அரசு மேற்கொள்ளும்வரை சிறுபான்மையினர் பள்ளிகள் உட்பட எந்த தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர், அலுவலர்கள் வேலை நீக்கம் செய்யப்படக்கூடாது, என்பது மற்றுமொரு கோரிக்கையாகும். இந்த அவையில் கூறியதுபோல சிறுபான்மையினரின் பள்ளிகளை எடுப்பதற்கு இயலாத நிலையில் ஒரு சாரார் நடத்தும் பள்ளிகளை மட்டும் அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது சரியல்ல. மேலும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, செயலில் உள்ளதால் எவரையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கூட வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று சொல்லமுடியாது. தற்காலிகப் பணிநீக்கம் செய்யும் ஆசிரியர்களுக்கு பிழைப்பு ஊதியம் ஒழுங்காக கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினார்கள். இதற்கு வழிவகை செய்யும் முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) விதிகள், 1974 திருத்தப்பட இருக்கிறது.

(6) பதவி உயர்வு செய்யப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எப்.ஆர். 22-பி-யின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள் தயாரிக்கப்பட்டு இன்னும் ஒருமாத அவகாசத்தில் வெளியிட உள்ளது. பணிவிதிகள் வெளியிட்ட பின்னர் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுவிடும். எம்.எட். பட்டம்பெற்ற மேல்நிலைப் பள்ளியாசிரியர் களுக்கு ஊக்க ஊதியம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

(7) சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோர் பி.டி. பட்டம் மற்றும் சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்றிருப்பின் அவர்களுக்கு முறையே பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் கொடுக்க வேண்டுமென்பது இன்னொரு கோரிக்கை. இந்தக் கோரிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

[1981 பிப்ரவரி 27

(8) இண்டக்ட் (Induct) செய்யப்படாமல் தற்போது, பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகள் பணி முடிந்ததும் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ள வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. பட்டதாரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பும், வசதியும் ஏற்கனவே உள்ளதால் தனியேற்பாடுகள் தேவையில்லை. கல்லூரி ஆசிரியர்கள் எம்.பில். தகுதி பெற வாய்ப்பளித்தது எந்த ஒரு கல்லூரி ஆசிரியரும் வேலையிழப்பு நேராமலிருப்பதற்காக செய்த ஏற்பாடாகும். பள்ளியாசிரியர்களுக்கு எம்.பில். (M. Phil.) தகுதியும் தேவையில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS